ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கொத்தப்புள்ளி ஊராட்சியில் தாதன்கோட்டை மற்றும் கதிரனம்பட்டியில் ரூ.26லட்சம் மதிப்பிலான இரண்டு புதிய அங்கன்வாடி மையங்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஊராட்சி மன்றதலைவர் சுந்தரி அன்பரசு அவர்களை திறக்க வைத்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அருகில் திட்ட இயக்குநர் திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.

நெல்லை ஏ.எல்.எஸ். இல்ல மணவிழா!

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர்கள் - கனிமொழிகருணாநிதி எம்.பி.வாழ்த்து!

நெல்லை.ஜூலை 2-

நெல்லை சட்டமன்றத் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.வும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஏ.எல்.எஸ் லெட்சுமணன் இல்லத் திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சட்டப்பேரவை தலைவர்மு.அப்பாவு,பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

தி.மு.க. முன்னாள் சட்டத்துறை செயலாளர்,முன்னாள் எம்.எல்.ஏ.வும் நெல்லை மாநகராட்சி முன்னாள் மேயருமான ஏ.எல்.சுப்பிரமணியன் அவர்களின் மகன் முன்னாள் எம்.எல்.ஏ தலைமை செயற்குழு உறுப்பினருமான ஏ.எல்.எஸ் லெட்சுமணன்தேவி - முத்து மீனா ஆகியோரின் மகள் இன்ஜினியர் சுபத்ரவிற்கும், தச்ச நல்லூர் உலகநாத சங்கர் கோமதி ஆகியோரின் மகன் என்ஜினீயர் மயிலேறும் பெருமாள்

ஆகியோரது திருமணம் சங்கர் நகர் அமோகா பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மணமக்களை கழகத் துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரிய அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவபத்ம நாதன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம் எல்ஏ,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப்(பாளை)ரூபி மனோகரன் (நாங்குநேரி) துறையூர் ஸ்டாலின் குமார்,

நெல்லை மாநகர செயலாளர் சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜ், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மாலை ராஜா,குளித்தலை ராமர் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிபாண்டியன்,சீனிவாசன் முன்னாள் எம்.பி விசிலாசத்யானந்த், ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ். தங்கபாண்டியன். போர்வெல் கணேசன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம் ஐயப்பன், மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.வி. சுரேஷ், தர்மன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம் என்ற கோபி, துபாய் சாகுல்,அண்டன் செல்லத்துரை,மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி, ரேவதிபிரபு,கதீஜா இக்லாம் பாசிலா,அணி அமைப்பாளர்கள் பலராமன், பாஸ்கரன்,மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம், பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை உள்பட கழக நிர்வாகிகள்,தொண்டர்கள்,அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருமண விழாவிற்கு வந்த அனைவரையும் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் குடும்பத்தினர் வரவேற்றனர்.

க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில்

சின்னாரம்பட்டியில் பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி!

திருப்பத்தூர். ஜூலை 2-

தமிழ்நாடு முதல்வரும், கழக தலைவர் அவர்களின் நல்லாட்சியில் திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், சின்னாரம்பட்டி ஊராட்சியில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும்.ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 1400 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணிகள் துவக்க விழாவில் பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பண்ணை குட்டைகள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் கு.செல்வராசு, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கு.ராஜமாணிக்கம், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், கந்திலி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதிதிருமுருகன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு முதல்வர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்ற திட்டக்குழு கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்டத் திட்டக்குழுச் செயலர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திசைவீரன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊரகப்பகுதி, உள்ளாட்சி பகுதி நகர் பகுதி, கிராமப் பகுதி, உள்ளிட்ட பகுதிகளுக்குத் தேவையான என்னென்ன திட்டங்களை செயல்படுத்துவது அதற்கான நிதி ஆதாரங்களை வழங்குவது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்!

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புலவர் கோவிந்தன்

ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு "அண்ணா விருது" வழங்கி சிறப்பித்தார்.

"கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு, புதுச்சேரியில் 5 நாட்களுக்கு கனமழை!

சென்னை, ஜூலை 2-

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் இன்று முதல் 5 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை நீலகிரி, கோவை, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூரில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜூலை 3, 4 தேதிகளில் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் அடுத்த 48 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மற்றும் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

மோடியின் அமெரிக்கப் பயணமும் மிரட்டப்படும் பெண் பத்திரிகையாளரும்...!

கடந்த ஜூன் 23 அன்று அரசு முறை பயணமாக ஐந்து நாள் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி அமெரிக்கா, எகிப்து சென்றிருந்தார். அமெரிக்காவில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட பிரதமர் மோடியிடம் வால் ஸ்டிரிட் ஜர்னலின் பெண் பத்திரிகையாளர் சப்ரினா சித்திக் என்பவர், "இந்தியாவில் முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் உரிமைகளை மேம்படுத்த தங்கள் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?" இப்படியானவை குறித்து இன்னும் சில கேள்விகள் எழுப்பியிருந்தார்.

கேள்வி கேட்ட பெண் பத்திரிகையாளரைச் சமூக வலை தளங்களில் மிரட்டல், ஆபாசமான வார்த்தைகளால் பா.ஜ.க. மற்றும் இந்துத்துவா கும்பல்கள் விமர்சித்து வருகின்றன. இப்படிப்பட்ட மிரட்டலைக் கண்டித்து அமெரிக்க வெள்ளை மாளிகை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. எந்த ஒரு பத்திரிக்கையாளரும் தனது கடமையைச் செய்வதற்காக மிரட்டப்படுவதையோ அல்லது துன்புறுத்தப்படுவதையோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் பத்திரிகையாளர்கள் துன்புறுத்தப்படுவதை அமெரிக்கா ஒரு போதும் ஏற்காது. அப்படித் துன்புறுத்தப்படுவது ஜனநாயகத்தின் கொள்கைகளுக்கு எதிரானது என்பதால், இந்தச் செயல்களானது மிகவும் மோசமான ஆன்லைன் துன்புறுத்துகள் ஆகும்" எனவும் தனது கடுமையான கண்டனத்தை அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தியாகப் பதிவு செய்திருக்கிறது.

அதனைப் போல, அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தரவுகள் தொடர்புத்துறை தலைவர் ஜான் கிருபை என்பவர் வால் ட்ரீட் ஜர்னலின் பத்திரிகையாளர் சப்ரீனா சித்திக் மீதான சமூகவலைதளத் துன்புறுத்தலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அப்படி .என்ன கேள்வி கேட்டார் சப்ரீனா சித்திக்?

"இந்தியாவில் முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும், ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கும், பேச்சுரிமை, எழுத்துரிமை போன்ற கருத்துரிமையை உறுதி செய்யவும், நீங்களும், உங்கள் அரசும் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? உலகின் பெரிய ஜனநாயக நாடு என்கிறீர்கள். ஆனால், சிறுபான்மையினரை உங்கள் அரசு பாரபட்சத்துடன் நடத்துவதாக மனித உரிமை அமைப்புகள் சொல்கின்றன. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் கருத்துச் சுதந்திரத்தை நிலை நிறுத்தவும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் எனவும் கேட்டார் அந்தப் பெண்மணி சப்ரினா சித்திக்.

செய்தியாளர் பெண்மணியின் இப்படிப்பட்ட கேள்வியை எதிர்பார்க்காத அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜோபைடன் அதிர்ச்சிக்கு உள்ளானார். அதே நேரத்தில் கேள்விக்கு உள்ளான மோடியின் முகம் கறுத்துப் போனது. அதனைச் சமாளிக்கும் விதத்தில், வெளிக்கட்டாமல், பிரதமர் மோடி" இந்தியா, அமெரிக்கா இரு நாடுகளின் டி.என்.ஏ.விலும் ஜனநாயகம் கலந்திருக்கிறது; எங்களது உயிரிலும், இரத்தத்திலும் ஜனநாயகம் உணர்வு மேலோங்கி இருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனநாயகத்தை, எங்களது முன்னோர்கள் ஆழமாகப் பதிவு செய்துள்ளனர். சட்டத்தின் கோட்பாடுகள் எங்களது அரசு முழுமையாகப் பின்பற்றி நடக்கிறது. மனிதநேயம், மனித உரிமைகள் இல்லாத ஒரு நாட்டை ஜனநாயக நாடு என அழைக்க முடியாது :இந்தியா உலகின் பெரிய ஜனநாயக நாடு என்று அழைக்கப்படும் போது அங்குப் பாரபட்சத்திற்கு இடமில்லை .நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு அனைவருக்குமான வளர்ச்சியை உறுதி செய்வோம் என்ற கொள்கையில் ,இந்தியா முன்னேறி வருகிறது எனவே இந்தியாவில் சாதி மத பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று தனக்கே உரிய ஏமாற்று வித்தையைப் பேசிக் காட்டினார்.

மோடி தந்த இப்படியான பேச்சில் எவ்வளவு உண்மைகள் அடங்கியிருக்கின்றன? என்பது குறித்து அனைவருக்கும் தெரியும் சரி அவர் பேசியுள்ளது உண்மைதானா?

மோடி அவர்கள் அமெரிக்க நாட்டிற்கு வருகை தந்து அமெரிக்கக் கூட்டுப் பாராளு மன்றக் கூட்டத் தொடரில், தனக்கே உரிய பாணியில், ஜனநாயகம் அமெரிக்காஇந்தியா முன்னேற்றம், பாதுகாப்பு, இராணுவ உறவு, கல்வி என்றெல்லாம் அளந்து விட்டார்.

ஆனால், இந்தியாவில் சிறுபான்மையினருக்கு மோடி ஆட்சியினால், பாதுகாப்பற்றநிலைதொடர்ந்து நீடிக்கிறது. அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நாட்டில் தொடர்கிறது.

இந்தியாவில் மத, சாதி பாகுபாடு இல்லை என்றெல்லாம் வாய் கிழிய பேசுகிற மோடி அமெரிக்காவுக்கு வருகை தந்த போது, பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. இந்தியாவின் கிரைம் மினிஸ்டர் என்றெல்லாம் பதாகைகள் தாங்கிய வாகனங்கள் அமெரிக்க வீதிகளில் ஊர்வலம் வந்தன.

மோடிக்கு எதிராக அமெரிக்காவில் ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்தன இந்தியாவில் நடந்துவரும் மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம் பறிப்பு, என்பவை குறித்து வருகை தரும் பிரதமர் மோடியிடம் கேள்விகள் எழுப்பப்பட வேண்டும் என 18 அமெரிக்க ஜெனட்டர்கள் (மேலவை உறுப்பினர்கள்) மற்றும் 75 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 75 எம்.பி.க்கள் கடிதம் எழுதிக் கையெழுத்தோடு அமெரிக்க குடியரசுத் தலைவர்ஜோபைடனுக்குஅனுப்பிஇருந்தனர்.

எனினும், அமெரிக்காச் சென்று திரும்பிய மோடிக்கு பெரும் அவமானங்கள் தான் ஏற்பட்டு இருக்கின்றன.

மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்து பல அப்பாவி இஸ்லாமியர்களைச் சிறையில் தள்ளியது; இஸ்லாமியப்பெண்கள் கிஷாப் (முகத்திரை) அணிவதை தடை செய்து பிரச்சினை ஆக்கியது. லவ் ஜிகாத்தைத் தடுக்கிறோம் என்ற பெயரில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பஜ்ரங்கத் தள், விசு இந்து பரிசத் போன்ற மதவாத சக்திகள் வெறியாட்டம் நடத்தியது; குடியுரிமைச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு என்ப தன் பேரில் இஸ்லாமியர் வேறுபாடு காட்டி அவர்களின் குடியுரிமையைப் பறித்தது; முத்தலாக் சட்டத்திருத்தத்தின் மூலம் முஸ்லிம் ஆண்களைச் சிறையில் தள்ளும் விதத்தில் குற்றவியல் தண்டனைக் குற்றவாளியாக்கிக் கொடுமைப்படுத்தியது. முகமது அக்லக் போன்ற பல அப்பாவி இஸ்லாமியர்களைப் பசு மாட்டிறைச்சி வைத்திருந்தார் என்று பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்தி அடித்தே கொன்று குவித்தது, அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 370 காஷ்மீருக்குக் தந்திருந்த சிறப்பு உரிமையைப் பறித்ததுடன், மேலும் மேலும் தீவிரவாதம், பயங்கரவாதம் என்ற பெயராலே

கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

பலரைச் சுட்டுக் கொன்றது. காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர்கள், பாரூக் அப்துல்லா, மெக்பூவா முப்தி, போன்றவர்கள் வீட்டுக் காவல்களில் சிறை வைப்பு, காஷ்மீர் நிலமை தெரிந்து வர எதிர்க்கட்சி எம்.பி.கள் சென்றபோது அவர்களை, விமான நிலையத்தில் கைது செய்து சிறை வைத்தது.

சமூக செயற்பாட்டாளர்கள் இது பற்றி எழுதினால், பேசினால், கருத்து சுதந்திரத்தைப் பறிப்பதன் மூலம் சிறையில் தள்ளித் தண்டனைக்கு உள்ளாக்குவது; மல்யுத்த வீரர்கள் விவகாரத்தில், பாலியல் பலாத்காரம் செய்த பா.ஜ.க.வினர் பொறுப்பில் உள்ளவர்களைத் கைது செய்யாமல் மறுதலிப்பது; காஷ்மீர் கத்துவா இடங்களில் சிறுமியைக் கோயிலில் வைத்துக் கற்பழித்துச் சிதைத்து கொன்றது, எதிர்க்கட்சிகள் இது பற்றிக் கேள்வி எழுப்பிப் போராட்டம் நடத்திய பின்னர், குற்றவாளிகள் மீது காலங்கடந்து வழக்குப் பதிவு செய்ததைக் கண்டித்து காஷ்மீர் அரசின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த பா.ஜ.க அமைச்சர்கள், பா.ஜ.க. எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் வீதியில் இறங்கிக் குற்றவாளிகள் மீது, எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று கூறி ஊர்வலத்தில் கோஷமிட்டு நடந்து வந்ததையெல்லாம்மோடிமறந்துவிட்டாரா?

காஷ்மீர் நிலையைப் பற்றி ஜம்மு காஷ்மீரின் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் என்பவர், மோடி அரசின் மீது பகிரங்கக் குற்றச்சாட்டு சுமத்தி வருகிறார். ஆனால் அவர் கூறும் விபரங்களை கேட்காத மோடி அவருக்கு எதிராக வழக்குகள் போட விசாரணை நடத்தி வருகிறார். குஜராத் எம்.எல்.ஏ. விக்னேஷ் மேவாணி, கேரளாவில் காங்கிரஸ் தலைவர் பவன் போன்றவர்கள் சட்ட விரோதமாகப் பேசினார்கள் என்று கூறிக் கைது செய்ததைப் போல், இந்தியப் பிரதமர் மோடியையோ, அமித்ஷாவையோ, பா.ஜ.க. தலைவர்களையோ, இந்தியாவின் எந்த மாநில மூலையில் பேசினாலும், அசாம், பீகார், ம.பி. உத்தரப்பிரதேசத்தில் வழக்குகள் போடச் சொல்லி எஃப்.ஐ.ஆர் பதிவுக் செய்து, அவர்களை இழுத்து வரச் செய்வது. இப்படி மோடி அரசின் பாசிசக் கொள்கையால் பாதிக்கப்பட்டு இந்திய நாடு பெரும் அவல நிலைக்கு உள்ளாகித் தவிக்கின்றது.

பிரதமர் மோடி அமெரிக்காவில் பேசும் போது இந்துமுஸ்லீம் ஒற்றுமை பற்றிப் பேசி உள்ளார். முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, தான் ஓய்வு பெறும் சில மாதங்களுக்கு முன்னர் இஸ்லாமியர் பண்டிகையான இரம்ஜான்இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியைத் தனது இராஷ்டிரபதி பவன்மாளிகையில்ஏற்பாடு செய்திருந்த போது, மரபு அடிப்படையில் பிரதமரும் அமைச்சர்களும் எம்.பி.க்கள் பங்கேற்க வேண்டும், ஆனால், யாரும் பங்கேற்காமல், அந்தநிகழ்ச்சியை முற்றிலும் புறக்கணித்தது எந்த விதத்தில் நியாயம்?

ஹைதராபாத் நகரை பாக்யா நகர் என்றும் அலகாபாத் நகரைப் பிரக்யா நகர் என்றும், இப்படியான இடங்கள் நகர்கள், சாலைகள், பாலங்கள் என ஏற்கனவே இருந்த இஸ்லாமியர்கள் பெயர்களை நீக்கி, பெயர் மாற்றம் செய்து வெறுப்புணர்வை தூண்டி வருகிறார் மோடி, நாடெங்கும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக வெறுப்புணர்வுப் பிரச்சாரங்கள், எதிரான செயல்பாடுகள் பாரதிய ஜனதா கட்சி செய்து வருகிறது.

ஆனால், இதையெல்லாம் மறைத்து மோடி அமெரிக்காவில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு "இப்படிப்பட்ட சூழலில் சிறுபான்மையினர் பாரபட்சத்துடன் நடத்தப்பட்டு இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு இடம் இல்லை; மக்களின் எல்லா விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும், எங்கள் அரசு பூர்த்தி செய்யும் என்று உறுதிபட அறிவித்திருக்கிறோம். அரசின் எல்லா நலத் திட்டங்களும், சலுகைகளும், எல்லோருக்கும் கிடைக்கிறது. இந்தியாவில் மதம் சாதி இனத்தின் பெயரால் மக்கள் பாரபட்சத்துடன் நடத்தப்படுவார்கள் என்ற பேச்சுக்கே இடம் இல்லை .இப்படிப் பேசி இருப்பதில் எள்ளளவும் உண்மை இருக்கிறதா?

அமெரிக்க நாட்டில், பெண் பத்திரிகையாளர் சப்ரீனா சித்திக் என்பவர், பிரதமர் மோடியிடம் கேட்ட கேள்விகளும்; கிரிஸ் நாடு சென்றிருந்த அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் பராக் ஒபாமா அவர்கள் ஏதென்ஸ் நகரில் பிரபல சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் உள்ளடங்கிய கருத்துக்களான, இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிராக நடந்து வரும்மோடி அரசின் வன்முறை, பாலியல் பலாத்காரங்கள் போன்ற செயல்பாடுகளை யாரும் மறுதலிக்க முடியாது. அதற்குமாறாக, சமூக வலைதளம் ஊடகங்களின் வழியாக பி.ஜே.பி உள்ளிட்ட இந்துத்துவா மதவாதச் சக்திகளைத் தூண்டிவிட்டுப் பதில் சொல்கிறோம் என்று எதிர்வினை ஆற்றுவது என்பது இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த மக்களுக்கும் எதிர்ப்பானதாகும். ஜனநாயகத்திற்கும் மதச்சார்பின்மைக்கும் சாவுக்குழி வெட்டுவதாகும்.

மணிப்பூரில், "மெய்டெய்" மற்றும் "குக்கி" இருவேறு சமூகத்தினருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கிற மோதலுக்குக் காரணமே பா.ஜ.க. முதலமைச்சராக உள்ள பைரோன் சிங்கும் அவரது கட்சியைச் சார்ந்த நபர்களின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தான். இதனால், இந்துமத வெறிப் போராட்டம் நடத்தி 200 க்கும் மேற்பட்ட கிறித்துவத் தேவாலயங்கள் மற்றும் 20க்கும் மேற்பட்ட இந்து கோயில்களை இடித்து, நாசமாக்கி, அழித்து இருக்கின்றனர். சிறுபான்மை மக்களுக்கு நடந்து வரும் மதவெறிக் கலவரத்தையெல்லாம் கண்டு கொள்ளாத மோடி, அமெரிக்க எகிப்து பயணம் மேற்கொண்டு ஏமாற்று நாடகம் நடத்தித் திரும்பி வந்துள்ளார். இந்தியப் பெரும் முதலாளிகள், தொழிலதிபர்களான முகேஷ் அம்பானி, ஆனந்த மகேந்திரா, சத்திய நாதெல்லா இந்திரா நூயி, போன்றவர்களுடன் விருந்தில் கலந்து கொண்டு பெருமை சேர்த்திருக்கிறார். இந்த இரவுநேர விருந்தில் தமிழ்நாடுதூத்துக்குடியில் 13பேரைச் சுட்டுக்கொன்ற ஸ்டெர்லைட் முதலாளி வேதாந்தா நிறுவனத்தின் உரிமையாளர் கலந்து கொண்டு நடத்திய எதிர்கால வேலைகளுக்கான இரகசிய பேச்சு வார்த்தைகளும், இந்த இரகசியச் சந்திப்பில் உள்ளடங்கும் எனப் பேசப்படுகிறது.

அண்மையில் பீகார் மாநில பாட்னாவில் நடைபெற்ற 18 கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு சென்னை திரும்பிய தமிழ்நாடு அரசு முதல்வர் மு.க. ஸ்டாலினை செய்தியாளர்கள் சந்தித்த போது அவர் தந்த பதில் இந்தியாவில் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக நடந்த இந்தக் கூட்டம் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் உருவாக்குவதாக அமைந்திருந்தது. இந்தக் கூட்டம் என்பது பா.ஜ.க. என்ற தனிப்பட்ட கட்சிக்கு எதிரானதாக யாரும் நினைக்க வேண்டாம். இந்தியாவின் ஜனநாயகத்தை, மக்களாட்சியை, பன்முகத் தன்மையை, மதச்சார்பின்மை, ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களை காப்பாற்ற வேண்டுமானால், பா.ஜ.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில், அனைத்துக் கட்சிகளும் மிகத் தெளிவாக இருக்கிறோம். இதில் கடைசி வரை உறுதியாக இருக்க வேண்டும் என்பதுதான் நான் பேசும்போது தெளிவாகக் கூறினேன் எனத் தெரிவித்தார்.